செ.வெ.எண்: 52 நாள்:18.08.2016

**புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கிராம நிர்வாக அலுவலர்களுக்கு 50 மடிக்கணினிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகப்பணிகளை மேற்கொள்ள மடிக்கணினிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (18-8-2016) வழங்கினார்.

இந்த மடிக்கணினிகளை கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கி கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருவாய்த்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு பொதுமக்களுக்கு தேவையான சான்றிதழ்களை விரைவாக வழங்கவும், அரசு அலுவலர்களின் பணிச்சுமையை குறைக்கவும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மடிக்கணினி வழங்க உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள 50 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகப்பணிகளை மேற்கொள்ள தலா 1 மடிக்கணினி வீதம் மொத்தம் 50 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.



இதன் மூலம் கிராம நிர்வாக அலுவலர்கள் தங்கள் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு ஆன்லைன் மூலம் பட்டா மாறுதல், சாதிச்சான்றிதழ், வருமானச்சான்றிதழ், இருப்பிடச்சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ் போன்ற பல்வேறு சான்றிதழ்களை எவ்வித சிரமம் இல்லாமல் உடனடியாக வழங்க முடியும். மேலும் பொதுமக்கள் தங்களுக்கு தேவையான சான்றிதழ்களை இ-சேவை மூலம் விண்ணப்பித்தவுடன் அதன் தகவல் உடனடியாக கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு இதன் மீது கிராம நிர்வாக அலுவலர்கள் உரிய விசாரணை மேற்கொண்டு உடனடியாக சான்றிதழ்களை வழங்கலாம். எனவே அனைத்து கிராம நிர்வாக அலுவலர்களும் இந்த மடிக்கணினியை உரிய முறையில் பெற்று பயன்படுத்தி பொதுமக்களுக்கு சிறப்பாக சேவையாற்ற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி, மாவட்ட ஆட்சியரக அலுவலக மேலாளர் (பொது) திரு.சுப்பையா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**